**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 177/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of LW 8 | | | Additional witness Examined as : PW 2 | | |
| Name | : | ராதா பாய் | Defence | : | |
| Father Name | : | முருகையன் | Court | : | |
| Village | : | உதவி ஆய்வாளர், பூம்புகார் காவல் நிலையம் | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 54/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது பூம்புகார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்ளவார் சக்கரவர்த்தி மற்றும் உதவி ஆய்வாளர் சேதுபதி ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.02.2024ஆம் தேதி பூம்புகார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சக்கரவர்த்தி அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது செல்வநாயகி க/பெ. பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் நிலைய மனு எண். 61/2024 என பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 23.02.2024 அன்று காவல் நிலை குற்ற எண் 26/2024 இதச பிரிவுகள் 294(b), 354, 506(i) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை

பதிவுசெய்தார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் வழக்கினை மேல் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேந்திரன் மற்றும் சுப்ரமணியன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரி தேடியபோது எதிரி கீழப்பெரும்பள்ளம் அய்யனார் கோவில் தெருவில் உள்ள எதிரியின் வீட்டிற்கு அருகில் மதியம் 02.00 மணியளவில் நின்றுகொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சக்கரவர்த்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 23.02.2024, இதச பிரிவுகள் 294(b), 354, 506(i) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.